

விழுப்புரம் வடக்கு மாவட்டம்ஆரணி நாடாளுமன்றத் தொகுதி 70 செஞ்சி சட்டமன்றத் தொகுதி வாக்குசாவடிபாக முகவர்கள் கலந்து கொண்டஆலோசனை கூட்டம்தொகுதி பொறுப்பாளர் அன்பழகன் தலைமையில் செஞ்சியில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ்ச்செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத்தலைவர்டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தழுதாழை ஊராட்சியில், கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் நடத்தப்பட்ட கால்நடைகளுக்கான சுகாதார முறைகள் மற்றும் கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு முகாமினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம், தலைமையில் துவக்கி வைத்தார்.இந்நிகழ்வில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலை வகித்தார்.இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர்,ஒன்றிய செயலாளர்கள் எஸ்.நல்லதம்பி,வீ. ஜெகதீசன்,வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் க.இராமலிங்கம், துணை தலைவர் எம்.ரெங்கராஜ்,கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர்கள் த.குணசேகர், சே.நாராயணன், அரும்பாவூர் கால்நடை உதவி மருத்துவர் இரா. விக்னேஷ மருத்துவர் திருநாவுக்கரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் மாவட்டத்தில் சாவடி மேற்கூரை இடிந்து விழுந்து

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 18 -

திருப்பூர் மாவட்டத்தில் சாவடி மேற்கூரை இடிந்து விழுந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கொழுமம் கிராமம், கொழுமம் - பழனி முதன்மைச் சாலையிலுள்ள சாவடியின் முகப்பு மேற்கூரை இன்று (16.10.2023) காலை எதிர்பாராதவிதமாக இடிந்து விழுந்ததில் முரளி ராஜா, த/பெ. மன்மதன் (வயது 35), கௌதம், த/பெ.சின்னதேவன் (வயது 29) மற்றும் மணிகண்டன், த/பெ. பாபு (வயது 28) ஆகிய மூவரும் பலத்த காயமடைந்து, அவர்களை உடுமலைப்பேட்டை அரசு பொதுமருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த மூவரையும் இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் வழிகாட்டுதல் படி நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன் மற்றும் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - செ.இராமலிங்கம் எம்.பி. -கோவி. செழியன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.7 கோடியே 96 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடங்கள்!

### அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

தஞ்சாவூர், அக்.18-

தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.7 கோடியே 96 இலட்சம் மதிப்பீட்டில் 39 புதியபல்வேறுதுறைசார்ந்த அரசுக் கட்டடத்தைபள்ளிக் கல்வித்துறைஅமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,மாவட்டஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப்,தலைமையில் திறந்துவைத்தார்.

அரசுதலைமைகொறாடாமுனைவர். கோ.வி. செழியன்,தஞ்சைவடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்,மாநிலங்களவைஉறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை நாடாளுமன்றஉறுப்பினர் செ.இராமலிங்கம், மாநிலங்களவைஉறுப்பினர் சி.சண்முகம் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க,தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் அம்மாபேட்டைஒன்றியம் கத்தரிநத்தம் ஊராட்சியில் ரூ.26.30 இலட்சம் மதிப்பீட்டில் கத்தரிநத்தம் தளவாய் பாளையம் ஊராட்சிமன்ற அலுவலககட்டடமும்,தளவாய்பாளையத்தில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் பகுதி நேரபொதுவிநியோக நியாயவிலைகட்டடமும்,தளவாய் பாளையத்தில் ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்கன்வாடி மையகட்டடமும்,கத்தரிநத்தம் ஊராட்சியில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்கன் வாடிகட்டடமும்,ஆலங்குடிஊராட்சியில் கொத்தட்டையில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்கன் வாடிமையகட்டடமும்,புலவர்நத்தம் ஊராட்சியில் கீழ்பாதி யில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்கன் வாடிகட்டடமும், இராராமுத்திரகோட்டையில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்க ன்வாடிகட்டடமும்,புலவர்நத்தம் ஊராட்சியில் ரூ.22.65 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சிமன்றஅலுவலக கட்டடமும்,நல்லவன்னியன்குடிகாடுஊராட்சியில் ரூ.22.65 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சிமன்றஅலுவலககட்டடமும்,ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் பொதுவிநியோகஅங்காடி கட்டடமும்,

நெல்லித்தோப்புஊராட்சியில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுவிநியோகஅங்காடிகட்டடமும்,எடவாக்குடிஊராட்சியில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்கன் வாடிமையகட்டடமும்,பூண்டிஊராட்சியில் ரூ.9.08 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்கன்வாடி கட்டடமும்,சாலியமங்கலம் ஊராட்சியில் ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் துணைவிவசாயவிரிவாக்கம் அலுவலககட்டடமும்,பள்ளியூர் ஊராட்சியில் பச்சக்கொட்டைஊராட்சிஒன்றியதொடக்கப் பள்ளியில் ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இரண்டுவகுப்பறைகட்டடமும்,வடபாதி ஊராட்சியில் கொக்கேரியில் ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன் வாடிமையகட்டடமும்,புலியங்குடிஊராட்சியில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன் வாடி கட்டடமும், ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் குடியிருப்புடன் கூடிய புதிய வருவாய் ஆய்வாளர் அலுவலககட்டடமும்,நெய்குன்னம் ஊராட்சியில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடிகட்டடமும்,கலஞ்சேரிஊராட்சியில் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகமும்,

கோவத்தகுடிஊராட்சியில் ரூ.25.63 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சிமன்றஅலுவலகமும்,மெலட்டூர் பேரூராட்சியில் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் வருவாய் ஆய்வாளர் அலுவலக கட்டடமும்,மெலட்டூர் ஊராட்சியில் ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் துணைவேளாண்மைவிரிவாக்கமையகட்டடமும்,அகரமாங்குடிஊராட்சியில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்கன்வாடிகட்டடமும்,அகரமாங்குடிஊராட்சியில் ரூ.15.40 இலட்சம் மதிப்பீட்டில் பொதுவிநியோகஅங்காடிகட்டடமும்,வடக்குமாங்குடிஊராட்சியில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்கன்வாடிகட்டடமும்,திருக்கருகாவூர் ஊராட்சியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கிராமஊராட்சிசெயலகம் கட்டடமும்,ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் துணை வேளாண்மைவிரிவாக்கமையமும்,ரூ.43.00 இலட்சம் மதிப்பீட்டில் துணைசுகாதாரநிலையமும்,பண்டாரவடைஊராட்சியில் ரூ.15.12 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கதொட்டியும்,சக்கராப்பள்ளிஊராட்சியில் ரூ.24.15 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டுவகுப்பறைகளுடன் கூடிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டடமும்,கணபதிஅக்ரஹாரம் ஊராட்சியில் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் பொதுவிநியோகஅங்காடிகட்டடமும்,வீரமாங்குடிஊராட்சியில் ரூ.10.93 இலட்சம் மதிப்பீட்டில் புதியஅங்கன்வாடிகட்டடமும்,கோவிந்தநாட்டுச்சேரி ஊராட்சியில் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் கிராமப்புறகால்நடைமருந்தககட்டடமும்,

கபிஸ்தலம் ஊராட்சியில் ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் துணைவேளாண்மைவிரிவாக்கமைய கட்டடமும்,திருமண்டக்குடி ஊராட்சியில் ரூ.14.90 இலட்சம் மதிப்பீட்டில் பொதுவிநியோகஅங்காடி கட்டடமும், கூனஞ்சேரி ஊராட்சியில் ரூ.25.48 இலட்சம் மதிப்பீட்டில் பஞ்சாயத்துஅலுவலகமும்,திருவைக்காவூர் ஊராட்சியில் ரூ.25.52 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சிமன்றஅலுவலகமும்,கொந்தகைஊராட்சியில் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் பொதுவிநியோகஅங்காடிகட்டடமும் எனமொத்தம் ரூ.7 கோடி 96 இலட்சத்து 46 ஆயிரம் மதிப்பீட்டில் 39 புதிய கட்டடத்தைபொதுமக்கள் பயன்பாட்டிற்குள்ளிக் கல்வித் துறைஅமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறைஅமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் தமிழகமக்களுக்கு பல்வேறுநலத்திட்டஉதவிகளைவழங்கிவருகிறார். அந்தவகையில் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுதிட்டம்,பெண்களுக்கானகட்டணமில்லாமல் பேருந்து பயணம்,பெண் குழந்தை கள் படிக்கவேண்டும் என்பதற்காகஅரசுபள்ளியில் 6 ஆம் முதல் 12 ஆம் வகுப்புபடித்து விட்டுகல்லூரிக்குச்செல்லும் பெண் குழந்தைகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம்,கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மாதந்தோறும் குடும்பதலைவி களுக்கு ரூ.1000 வழங்கும் திட்டம் போன்றபல்வேறுதிட்டங்கள் மக்களின் நலனைமனதில் கொண்டுபல்வேறுதிட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவந்துள்ளார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பித்துபயன்பெறாததகுதியுள்ளகுடும்பதலைவிகள் மேல்முறையீடுசெய்யகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மேலும்,மக்கள் பிரதிநிதிகளைசந்தித்துமனுக்களாகவும் வழங்கலாம். அவ்வாறுவழங்கப்படும் மனுக்கள் தகுதியுள்ளவர்களாக இருந்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றுபள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்றஉறுப்பினர்கள்.டி.கே. ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), முனைவர்.எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி). எச்.எஸ்.ஸ்ரீகாந்த், கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர்.பூர்ணிமா, பொதுப்பணித்துறைசெயற்பொறியாளர் (கட்டடங்கள்).நாகவேல், வேளாண்மை இணை இயக்குனர் ந.க.நல்லமுத்து ராஜா, மாவட்டஊராட்சி தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, மாவட்ட ஊராட்சி துணைதலைவர் சு.க.முத்து செல்வம்,ஊரகவளர்ச்சிசெயற்பொறியாளர் செல்வராஜ், ஒன்றிய குழுத் தலைவர்கள் கே.வ.கலைச்செல்வன் (அம்மாபேட்டை),திருமதி. சுமதிகண்ணதாசன் (பாபநாசம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# நாகை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் சதுரங்கப் போட்டி!

### என்.கௌதமன் தொடங்கி வைத்தார்!

நாகை, அக்.18-

நாகை மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் மாவட்ட சதுரங்க கழகம் இணைந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில அளவிலான சதுரங்க போட்டி கீழ்வேளூரில் சண்முகா மண்டபத்தில் நடைபெற்றது. சதுரங்க போட்டி தொடக்க விழாவிற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வி. கமல் தலைமை தாங்கினார். தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, கீழ்வேளூர் பேரூர் செயலாளர் கா.அட்சய லிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் த.மணிகண்டன்வரவேற்றார். சதுரங்கப் போட்டியை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

போட்டியில் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 350க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச் ஒன்றியக் குழு துணைத்தலைவர் எஸ்.புருஷோத்தமதாஸ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் மா.சு.செந்தில், ஜெ.சுதாகரன், வி.டேனியல்விஜய், கீழ்வேளூர் வடக்கு, தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.நடராஜன், பாரதிமோகன், மதியழகன், ஆத்மநாதன், அன்சாரி, கீழ்வேளூர் பேரூர் கழக நிர்வாகிகள் சேகர், பிரசாத், மணிமாறன், ரெங்கராஜ், மதன், ராஜகோபால், அமுல் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சு.இராமராஜன் நன்றி கூறினார். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், கலந்து கொண்ட வர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் ஆறுபாதி ஊராட்சியில் பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.சிவபாலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் காளி.தேசப்பன், மாவட்ட பிரதிநிதிகள் என்.தென்னரசன், பிரபாகரன் மற்றும் பலர் உள்ளனர்.

### மதுரை மாநகர் மாவட்டம்

## காமராஜர்புரம் பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

மதுரை மாநகர் மாவட்டம், காமராஜர்புரம் பகுதிச் செயலாளர் எம்.எஸ்.தெட்சிணாமூர்த்தி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர்.எம்.முத்து**, (முருகன் இல்லம், 2சி, கோதண்டராம் மில் ரோடு, கீரைத்துறை, மதுரை 625 001.) அவர்கள், காமராஜர்புரம் பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள், இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஓரத்தநாடு மு.காந்தி
### அக்டோபர் 18 (2020)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஒன்றிய துணைச்செயலாளர் என படிப்படியாக பொறுப்பு வகித்து 2014 முதல் தனது இறுதிகாலம் வரை ஓரத்தநாடு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

புதூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – ஓரத்தநாடு ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

"கொம்பு சீவி விட்ட காளை போல் சீறிப் பாய்ந்து கழகப் பணியாற்றியதால், கழகத் தொண்டர்களின் பேரன்பைப் பெற்றவராக திகழ்ந்தார்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, அதனை முன்னெடுத்து சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**